**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.187/2025**
**Sessions :**
**Deposition of Witness for : PW1 , LW1**

| | |
|---|---|
| Name | : திருமதி.கங்காதேவி |
| Father's/Husband Name | : திரு.மணி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 17th day of August, 2026**

எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்.

**<u>முதல் விசாரணை</u>:-**

1. நான் தற்போது பேக்கரணை கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். நீதிமன்ற ஆஜர் எதிரி எனது தம்பி ஆவார். நானும், எனது தம்பியும் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் ஆகிவிட்டோம். இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன்.

2. கடந்த வருடம் ஆலய திருவிழாவில் சண்டை நடந்தது. மற்ற விவரங்கள் தற்போது ஞாபகம் இல்லை.

3. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. **(புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**4. (அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க வேண்டுகோள் விடுக்க, அதை ஏற்றுக்கொள்ளப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

5. கடந்த 25.06.2023 அன்று எங்கள் கிராமத்தில் முத்துமாரியம்மன் ஆலய திருவிழாவின் போது மாலை 5.30 மணிக்கு எனது மகன் நவீன்ராஜ் என்பவர் எதிரி சொற்சிலம்புவின் மகன் பிரதிஷ் என்பவரும் சிலம்பாட்டம் ஆடிக்கொண்டு இருந்தார்கள் என்றும் அப்போது ஏற்பட்ட தகராறு ஏற்பட்டது என்றும் அதனால் மேற்படி பொற்சிலம்பு என்னை ஆபாசமான வார்த்தையால் திட்டி கீழே தள்ளிவிட்டார் என்றும் கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது எதிரி எனது தம்பி என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை... இல்லை**

**மறு விசாரணை....** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**

District Munsif Cum Judicial Magistrate

**Cheyyur.**